**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை : திருமதி.S.சுமதி, எம்.எல்.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.23/2026 இன் அசல் வழக்கு எண்.29/2022**

கந்தசாமி ... மனுதாரர் / வாதி

**/எதிர்/**

1. P.K.செல்வம்
2. தங்கமணி ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 23.07.2026-ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.RK.கார்த்திக் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.மதியழகன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், மனு கோப்புகளை பரிசீலித்தும், இருதரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில், மதுரை Forensic laboratory துறை சேர்ந்த கையெழுத்து வல்லுநரை சாட்சியாக விசாரிப்பதற்காக, அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. முதல் எதிர்மனுதாரர் / பிரதிவாதி அவரது சாட்சியத்தில், மனுதாரர் / வாதி, முதல் எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் லட்சுமி விலாஸ் வங்கி கரூர் மேற்கு கிளையில் கணக்கு எண்.036330100032577-ல் வழங்கிய ரூ.13,00,000/-ல் ரூ.3,00,000/-த்திற்கு எதிர்மனுதாரர் / முதல் பிரதிவாதி அவருடைய காசோலை எண்.000072 மூலம் அவரது மகன் அருணுக்கு செலுத்திவிட்டதாகவும், மேற்படி தொகையில் ரூ.4,00,000/-த்திற்கு முதல் எதிர்மனுதாரர் / முதல் பிரதிவாதி அவருடைய பங்குதாரரான பெருமாள் என்பவரின் KVB கரூர் L.N.S கிளை வங்கி கணக்கு எண்.1152155000090496-க்கு அனுப்பி அதை மனுதாரரின் மகன் அருண் மேற்படி பெருமாளின் சுய காசோலை எண்.000143 மூலம் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி காசோலைகளின் பின்புறம் மேற்படி அருண் கையொப்பம் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், முதல் எதிர்மனுதாரர் / முதல் பிரதிவாதி தரப்பில் DBS வங்கி, கரூர் மேற்கு கிளை மேலாளரும், KVB, கரூர் L.N.S கிளை வங்கி மேலாளரும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். உண்மையில், முதல் எதிர்மனுதாரர் / முதல் பிரதிவாதியிடமோ, மேற்படி பெருமாளிடமோ மேற்படி அருண் பணம் பெறவில்லை, காசோலையில் கையொப்பம் செய்தும் பணம் பெறவில்லை. எனவே, மேற்படி காசோலைகளின் பின்புறம் உள்ள அருண் கையொப்பம் என சொல்லக்கூடியதையும், மனுதாரரின் மகன் அருண் கையொப்பத்தையும் வல்லுனரிடம் கையெழுத்து குறித்து அறிக்கை பெற்று வரப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கை மற்றும் கருத்துரை குறித்து மனுதாரர் தரப்பில் மேற்படி கையெழுத்து வல்லுரை சாட்சியாக விசாரிப்பதற்காக, அசல் வழக்கை மீண்டும் மறுதிறவு செய்யக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **<u>முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாவது எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

எதிர்மனுதாரர்கள் எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர இதர

சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் / வாதியின் மகன் அருண் என்பவர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.174/2019 என வழக்கு தாக்கல் செய்து, அது கடந்த 06.04.2024-ம் தேதி முடிவடைந்துள்ளது. மேற்படி வழக்குரையில் உள்ள கையெழுத்தையும், மேற்படி DBS வங்கி, கரூர் மேற்கு கிளை காசோலை எண்.000072-ன் பின்புறம் உள்ள அருண் கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்க்க சொல்லி வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, மேற்படி கையொப்பங்கள் ஒன்றல்ல என்று அறிக்கை வரப்பெற்றுள்ளது. உண்மையில், அ.வ.எண்.174/2019 வழக்கின் வழக்குரையில் அருண் என்பவர் தான் கையெத்து செய்தாரா? என்பதே கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இந்நிலையில், பொது ஆவணம் இல்லாத ஒரு ஆவணத்தில் உள்ள கையொப்பத்தையும், காசோலையில் உள்ள கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை பெறுவது என்பதும், மேற்படி அறிக்கையை வாதி தரப்பில் குறியீடு செய்ய மேற்படி வழக்கை மறுதிறவு செய்யக் கோரி மனு தாக்கல் செய்வது சட்டப்படி ஏற்புடையதல்ல. மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு வலுவிழந்த நிலையில் உள்ளதால், அவருடைய வழக்கை வலுவடைய செய்ய வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6) **தீர்வு** :-

**(அ)** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

(ஆ) மனுதாரர் / வாதி தரப்பில், அசல் வழக்கில் கூறப்பட்டுள்ள காசோலைகளின் பின்புறம் உள்ள அருண் கையொப்பம் என சொல்லக்கூடியதையும், மனுதாரரின் மகன் அருண் கையொப்பத்தையும் வல்லுனரிடம் கையெழுத்து சம்பந்தமாக வரப்பட்டுள்ள அறிக்கை மற்றும் கருத்துரை குறித்து மனுதாரர் தரப்பில் மேற்படி கையெழுத்து வல்லுரை சாட்சியாக விசாரிப்பதற்காக, அசல் வழக்கை மீண்டும் மறுதிறவு செய்து உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

(இ) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், பொது ஆவணம் இல்லாத ஒரு ஆவணத்தில் உள்ள கையொப்பத்தையும், காசோலையில் உள்ள கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்து அறிக்கை பெறுவது என்பதும், மேற்படி அறிக்கையை வாதி தரப்பில் குறியீடு செய்ய மேற்படி வழக்கை மறுதிறவு செய்யக் கோரி மனு தாக்கல் செய்வது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு வலுவிழந்த நிலையில் உள்ளதால், அவருடைய வழக்கை வலுவடைய செய்ய வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

(ஈ) மனு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், ஏற்கனவே அசல் வழக்கில் தாவா காசோலைகளின் பின்புறம் உள்ள அருண் என்ற கையொப்பமும், மனுதாரரின் மகன் அருண் என்பவரின் கையொப்பமும் வல்லுனருக்கு அனுப்பப்பட்டு, அறிக்கை மற்றும் கருத்துரை நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு ஏதும் செய்யப்படவில்லை. மேலும், முதல் எதிர்மனுதாரர் / முதல் பிரதிவாதியிடம் மேற்படி அருண் பணம் ஏதும் பெறவில்லை என்றும், தாவா காசோலையில் உள்ள கையொப்பமும், அசல் வழக்கில் உள்ள அருண் கையெழுத்தும் வேறு என்பது இம்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களை பார்வையிடுகையில் தெளிவாகியுள்ள நிலையில், மேற்படி வல்லுநரின் அறிக்கையை குறியீடு செய்து,

மேற்படி அறிக்கை மற்றும் கருத்துரை வழங்கிய கையெழுத்து நிபுணரை விசாரிக்க வேண்டும் என இம்மனுதாரர் கோரியுள்ளது ஏற்புடையதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. மாறாக, இம்மனுதாரருக்கு இம்மனுவை அனுமதிக்காவிட்டால் இழப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு இம்மனுதாரரின் வாதத்தை நிரூபிப்பதற்கு, இம்மனுதாரருக்கு வாய்ப்பு வழங்குவதே நீதிக்குகந்ததாகும் என்று இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இப்பிரச்சினை சம்பந்தமாக தீர்மானிக்கப்படுகிறது.

**7) முடிவாக,** இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 6 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

S SUMATHY

Digitally signed by S SUMATHY
DN: cn=S SUMATHY, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**கரூர்.**

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்** : இல்லை-

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

S SUMATHY

Digitally signed by S SUMATHY
DN: cn=S SUMATHY, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**கரூர்.**